# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W. 19 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. கணேசன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது வானரமுட்டியில் குடியிருந்து ஆட்டோ ஓட்டுநராக தொழில் செய்து வருகிறேன். சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்பு மதிய வேளையில் வானரமுட்டி பேருந்து நிறுத்தத்தில் போலீசார் வந்து என்னிடம் வெற்றுத்தாள்களில் கையொப்பம் பெற்றுக் கொண்டார்கள். அதில் என்ன எழுதிக் கொண்டார்கள் என்று எனக்குத் தெரியாது. பார்வை மகஜர் மற்றும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பங்கள் என்னுடையதுதான். அவை முறையே **அ.சா.ஆ 6 மற்றும் 7**. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது. சாட்சி மேற்கொண்டு விசாரணை செய்யப்படுகிறார்.

போலீசார் என்னை விசாரித்தார்கள் என்றும், போலீஸ் விசாரணையில் 12.03.2019 அன்று கல்லூரணி ஓடை பாலத்திற்கு அருகில் பிற்பகல் 2.30 மணியளவில் நானும், ராமசுப்பு மகன் ஜெயக்குமார் என்பவரும் வந்து கொண்டிருந்தபோது போலீசார் சம்பவ இடத்தை

பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தபோதும் சம்பவ இடத்தில் இறந்துபோன நபரின் கழுத்திலிருந்த கயிறு, 500 ரூபாய் தாள்கள் நான்கு, ஒரு கைபேசி, ரத்தம்பட்ட கல், ரத்தம்பட்ட டையமண்ட் குவார்ட்டர் பாட்டில், ரத்தம்பட்ட மற்றும் ரத்தம்படாத மண் ஆகியவற்றை மகஜரில் கைப்பற்றும்போதும் நாங்கள் உடனிருந்து அந்த மகஜர்களில் கையொப்பமிட்டதாக சொல்லியுள்ளேன் என்றும், தற்போது ஆஜர் எதிரிகளுக்கு பயந்துகொண்டு பொய்சாட்சி சொல்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை

இல்லை.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:37:49 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.

Prosecution witness for P.W. 20 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திருமதி. சிவணுத்தாய்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

முதல் விசாரணை

நான் தற்போது கோவில்பட்டி அனைத்து மகளிர் காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 12.04.2019 அன்று 14 மணியளவில் நிலைய குற்ற எண் 62/2019 குவிமுச பிரிவு 174(3) ன் படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை துரித தபாலாக பெற்று 1வது குற்றவியல் நடுவரிடம் 18.30 மணியளவில் ஒப்படைத்து ஒப்புதல் பெற்றேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார். மேற்படி அலுவலுக்காக எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டு **அ.சா.ஆ 8**.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நாலாட்டின்புதூர் காவல்நிலையத்திலிருந்து கோவில்பட்டி நீதிமன்றம் செல்வதற்கு சுமார் 1.1/2 மணி நேரமாகும். இரண்டு பேருந்துகளை பிடித்து செல்லவேண்டும். நான் பேருந்தில் சென்றேன். ஆனால் வழக்கு பதிவு செய்த நான்கு மணிநேரம் கழித்து நான் நீதித்துறை நவடுவரிடம் ஒப்படைத்தேன் என்றால் சரிதான். நீதிமன்றத்தில் சாட்சிகள் விசாரிக்கப்பட்டுக் கொண்டிருந்ததால் நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்க

காலதாமதமானது. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் மேற்படி முதல் தகவல் அறிக்கையை நீதித்துறை நடுவரிடம் ஒப்படைக்கவில்லை என்றும், அவரது வீட்டில்தான் ஒப்படைத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN

Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:37:57 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.

Prosecution witness for P.W. 21 .

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. லெட்சுமணபெருமாள். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது கோவில்பட்டி மேற்கு காவல்நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்தபோது 12.04.2019 அன்று 15 மணியளவில் கல்லூரணி ஊருக்கு மேற்கே பெரிய பாலம் ஓடைக்கு வடபுறம் பருத்திக் காட்டில் வேப்பமரத்தின்கீழ் நிலைய குற்ற எண் 62/2019 குவிமுச 174(3) பிரிவின் கீழான வழக்கில் இறந்துபோன இராமநாதன் பிரேதத்தின்மீது ஆய்வாளர் 15 முதல் 17 மணி வரையில் பஞ்சாயத்தார் முன்னிலையில் பிரேத விசாரணை செய்தபிறகு பிரேதத்தையும், அதன்மீது இருந்த பொருட்களையும், அருகில் இருந்த பொருட்களையும் சேகரித்து பிரேதத்துடன் பிரேத பரிசோதனைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றேன். மாலை 18.10 மணியளவில் எடுத்துச் சென்றேன். ஆய்வாளர் வேண்டுகோள் கடிதத்துடன் பிரேதத்தை ஒப்படைத்தேன். பிரேதம் பிணவறையில் வைக்கப்பட்டது. மறுநாள் காலை 10 மணியளவில் பிரேதத்தை மருத்துவரிடம் அடையாளம் காட்டி 10.10 மணியளவில் பிரேத பரிசோதனை சமயத்தில் நான் மருத்துவருடன் இருந்தேன். பிரேத

பரிசோதனை முடிந்து பிரேதத்தை அவரது தகப்பனாரான அ.சா.1 இடம் ஒப்படைத்தேன். பிரேதத்திலிருந்து எடுக்கப்பட்ட ஊதா நிற ஜீன்ஸ் பேண்ட், வெளிர் ஊதா நிறத்திலிருந்த முழுக்கை சட்டை, ஊதா நிற ஜட்டி, இடுப்பில் அணிந்திருந்த தோல் பெல்ட் ஆகியவற்றை பெற்று 17 மணியளவில் நிலையம் வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். 26.04.2019 அன்று நீதிமன்ற உத்தரவு பெற்று உடல் உள்ளுறுப்புகளை மருத்துவமனையிலிருந்து பெற்று திருநெல்வேலி வட்டார தடய அறிவியல் ஆய்வகத்தில் ஒப்படைத்தேன். மேற்படி அலுவல்களுக்கு எனக்கு வழங்கப்பட்ட கடவுச்சீட்டுக்கள் **அ.சா.ஆ 9 வரிசை** (எண்ணிக்கையில் 5). ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் பிரேதத்தை எடுத்துச் செல்லவில்லை என்றும், பிரேத விசாரணையும் நடைபெறவில்லை என்றும், உள்ளுறுப்புகளை எடுத்துச் சென்று மேற்படி ஆய்வகத்தில் ஒப்படைக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:04 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.123/2020.
Prosecution witness for P.W. 22.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. முருகையா.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.02.2026.

Accused present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது காவல்துறையில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து ஓய்வு பெற்று திருநெல்வேலியில் குடியிருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு நாலாட்டின்புதூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 12.04.2019 அன்று 13 மணியளவில் நிலைய பொறுப்பில் இருந்தபோது அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரைப் பெற்று நிலையகுற்ற எண் 62/2019 குவிமுச 174(3) பிரிவின் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 10**. அதை புகாருடன் சேர்த்து கோவில்பட்டி 1வது குற்றவியல் நீதித்துறை நடுவருக்கு அசா.21 மூலம் அனுப்பினேன். நகலை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பினேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் அ.சா.1 நிலையம் ஆஜராகி எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றும், நானும் அ.சா.21ன்

மூலம் அதை நீதித்துறை நடுவருக்கு அனுப்பவில்லை என்றும் சொன்னால் சரியல்ல.

மேற்படி குறுக்கு விசாரணை 1ம் எதிரி தரப்பில் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.02.27 17:38:12 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.